**தொழில் அமைச்சு**
**தேசிய தொழிற் கற்கை நிறுவனம்**

**வெற்றிடங்கள்**

தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் மற்றும் 2010 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கம் கொண்ட தேசிய தொழிற் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய தொழிற் கற்கை நிறுவனத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் பொருட்டான வெற்றிடங்களுக்கு, அதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களில் இருந்து, தேசிய தொழிற் கற்கை நிறுவனம் நடாத்தும் நேர்முகப் பரீட்சையின் பின்னர், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**01. நிகழ்ச்சித்திட்ட அலுவலர் - பதவி 01**

1. சேவை தொகுதி - கனிஷ்ட முகாமையாளர்
2. சம்பளக் குறியீடு - JM 1-1
3. சம்பள அளவுத் திட்டம் - ரூபா. 72,650/-10x1360-18x2040-122,970/-

( 2025 வரவு செலவு திட்டம் மூலம் வெளியிடப்பட்டுள்ள, சம்பள மீளமைப்பு பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்கையில் அடிப்படை சம்பளம் ரூபா.58,615/- ஆகும்.)

4. தகைமைகள்

**4.1 வெளியக விண்ணப்பத்தாரிகள் பொருட்டு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பாடத் துறையிலும் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**4.2 உள்ளக விண்ணப்பத்தாரிகளுக்கான தகைமைகள்**

தொடர்புடைய பதவிக்குரிய விடயத் துறையில் 'முகாமைத்துவ உதவியாளர்' சேவை தொகுதியில் II ஆம் தரப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

02. முகாமைத்துவ உதவியாளர் ( தொழில்நுட்பம் அல்லாத) 02 பதவிகள்

1. சேவை தொகுதி : முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)

2. சம்பள தொகுதி : MA 1-1

3. சம்பள அளவுத் திட்டம் : ரூபா .46,220 – 10x540-7x630-4x890-20x1190 - ரூபா.83,390/-

(2025 வரவு செலவு திட்டம் மூலம் வெளியிடப்பட்டுள்ள, சம்பள மீளமைப்பு பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்கையில் அடிப்படை சம்பளம் ரூபா.46,220 ஆகும்.)

4. தகைமைகள்

**4.1 வெளியக விண்ணப்பத்தாரிகளுக்கான கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர்தரப்) பரீட்சையில் குறைந்தது மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொதுப் பரீட்சையைத் தவிர).

**4.2 உள்ளக விண்ணப்பத்தாரிகளுக்கான தகைமைகள்**

ஆரம்பத் தரம் – தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிப்பெற்ற சேவை தொகுதிகளில் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

I. கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், மற்றும்

II. சேவையில் நிரந்தரப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், குறித்த பதவிகளில் நிரந்தரப்படுத்தியிருத்தல் வேண்டும்.

III. உரிய திகதிக்கு உடன் முன்னர் நிரந்தர நியமனத்தின் கீழ் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகளிலான தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நியமன அதிகாரி நியமிக்கும் குழுவால் நடாத்தப்படும் கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக தெரிவு செய்வதன் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**வயதெல்லை**

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஏனைய தகைமைகள்**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் உள ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

பதவி நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரிமையுண்டு.

**விண்ணப்பிக்கும் முறை**

இந்த அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி, A4 அளவு காகிதத்தின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயார் செய்துக் கொள்ளுதல் வேண்டும். முதல் பக்கத்தில் 01 முதல் 03 வரையிலான பந்திகளையும், மீதமுள்ளவை அடுத்த பக்கங்களிலும் இருக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கல்வி, தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான தகைமைகளை உறுதி செய்வதற்கு பிரதிகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலும், தற்போதும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள்/ சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பத்தாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட மாதிரி படிவத்திற்கு இணங்காத மற்றும் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள், எந்தவொரு காரணமும் கூறப்படாமல் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் உரிய பதவி குறிப்பிடப்பட்டு 2025.07.30 திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தால் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்தப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு தேசிய தொழிற் கற்கை நிறுவனத்தின் ஆளுகைச் சபைக்கு உரியதாகும்.

தொலைபேசி இலக்கம் - 0112 786541 / 0112 786551
மின்அஞ்சல் முகவரி nilsprocurementunit@gmail.com
இணையத்தளம் www.nils.gov.lk

பணிப்பாளர் நாயகம்
தேசிய தொழிற் கற்கை நிறுவனம்
2 ஆவது மாடி
தொழிற் பொதுச் செயலகம்
கொழும்பு 05